## பத்திரிக்கை செய்தி குறிப்பு

வேலூர் மாவட்டம், அனைக்கட்டு தாலுக்கா தெத்தூர் கிராமத்தில் வசிக்கும் திரு.சிதம்பரம், வயது.33/2018, த/பெ.ராமன் என்பவரும் அவரது தந்தை திரு.ராமன் அவர்களும் தெத்தூர் கிராமத்தில் அவர்களுக்கு சொந்தமாக உள்ள சுமார் 2 ஏக்கர் நிலத்தில் பயிர்வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த 08.10.2018 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் வேலூர் மாவட்டம் அமிர்தி வனச்சரக அலுவலர் திரு.ராஜா அவர்கள் வனக்காப்பாளர்களுடன் தெத்தூர் கிராமம் சென்று அங்கு திரு.ராமன் என்பவர் தன்னுடைய விவசாய நிலத்தில் பயிர் வேலை செய்து கொண்டிருந்தவரின் நிலத்தை பார்வை செய்து அவர் வனத்துறைக்கு சொந்தமான அரசு நிலத்தை சேர்த்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறி திரு.ராமன் அவர்களை அழைத்துக்கொண்டு தொங்குமலை வனவர் அலுவலகம் அழைத்துவந்து வைத்துவிட்டு ராமனின் மகன் திரு.சிதம்பரம் என்பவரிடம் பணம் ரூ.1,50,000/- கொடுத்துவிட்டு அவரது தந்தை திரு.ராமனை அழைத்து செல்லுமாறு கூறியுள்ளனர் பின்னர் 08.10.2018 அன்று மாலை திரு.ராமன் என்பவரை அமிர்தி வனச்சரக அலுவலர் அலுவலகத்திற்கு அழைத்துவைத்து காவலில் வைத்துள்ளனர். பின்னர் 09.10.2018 அன்று திரு.ராமன் அவர்களின் மகன் திரு.சிதம்பரம், அமிர்தி வனச்சரக அலுவலர் திரு.ராஜா அவர்களை சந்தித்து தன்னுடைய தந்தையை அனுப்புமாறு கேட்டதற்கு ரூ.1,50,000/- பணத்தை லஞ்சமாக கொடுத்துவிட்டு அவரது தந்தையை அழைத்து செல்லுமாறு கூறியுள்ளார், திரு.சிதம்பரம் தான் ஏழ்மையான குடும்பத்தை சார்ந்தவர் என்றும் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று

கூறியதால் வனச்சரக அலுவலர் தான் ஏற்கனவே கேட்ட பணத்தை குறைத்து ரூ.60,000/-ம் கொடுத்துவிட்டு திரு.ராமன் அவர்களை அழைத்து செல்லுமாறு கூறியுள்ளார். திரு.ராஜா, அமிர்தி வனச்சரக அலுவலர் அவர்கள் லஞ்சமாக பணம் ரூ.60,000/- கேட்பது சம்மந்தமாக திரு.சிதம்பரம் அவர்கள் 10.10.2018 அன்று காலை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திரு.ராஜா, அமிர்தி வனச்சரக அலுவலர் அவர்கள் 10.10.2018 இரவு சுமார் 21.00 மணிக்கு லஞ்சமாக பணம் ரூ.60,000/-தை திரு.சிதம்பரம் அவர்களிடம் கேட்டு பெற்றுக்கொண்டு திரு,ராமன் அவர்களை அனுப்பியபோது கையும் களவுமாக பிடித்து பணம் ரூ.60,000/- முழுவதும் கைப்பற்றுப்பட்டு திரு.ராஜா, அமிர்தி வனச்சரக அலுவலர் அவர்களை கைது செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கின் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.